# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**O.S. No. 209/2022**

**PW 2**

| | | |
|---|---|---|
| Name | : | ராஜேஸ்வரி |
| Father's/Husband's Name | : | முருகன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.02.2025.

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

(1) வாதிகள் என்னுடைய பிள்ளைகள் என்றால் சரிதான் . 1 ம் பிரதிவாதி என் கணவர் என்றால் சரிதான் . வழக்குச் சொத்தை கிரையம் பெற்ற 2 ம் பிரதிவாதி இந்திராணியை எனக்கு தெரியாது. அந்த இடத்தை கிரையம் பெற்றபின்னர் அவரை நான் பார்க்கவில்லை. இந்திராணியின் கணவர் செல்வராஜ் என்பவரை 2013 ல் இருந்து எனக்கு தெரியும் என்றால் சரிதான் . நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்த பின்னர் வாதியின் வழக்கறிஞரை என் பிள்ளைகளுடன் சந்தித்தேன் என்றால் சரிதான் . தாவாவில் வாதிகளின் முகவரியும் 1 ம் பிரதிவாதியின் முகவரியும் ஒரே முகவரி என்றால் சரிதான் . 2022 ல் வழக்கு தாக்கல் செய்தபோது நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இருந்தோம் என்றால் இல்லை. அப்போது அந்த வீட்டில் நானும் என் பிள்ளைகளும் தான் இருந்தோம் . என் கணவர் இல்லை. அவர் எங்கு சென்றிருந்தார் என்று எனக்கு தெரியாது . என்

தாய் வீடு திருவண்ணாமலை பக்கத்திலுள்ள கீரனூர் கிராமம் என்றால் சரிதான் . என் சகோதரி புவனேஸ்வரியும் கீரனூர் கிராமம் என்றால் சரிதான் . என் பிள்ளைகள் நாகப்பாடி கிராமத்தில் இருந்து படித்தார்கள் என்றால் சரியல்ல . கீரனூர் கிராமத்தில் இருந்து 1, 2 வாதிகள் படித்தார்கள். அவர்கள் கீரனூர் அருகில் உள்ள ராஜந்தாங்கல் கிராம பள்ளியில் படித்தார்கள் . அவர்கள் பள்ளியில் படித்த சான்றிதழ்கள் என்னிடம் தான் உள்ளது .என் பிள்ளைகள் மூவரும் நாகப்பாடியில் இருந்து தான் படித்தார்கள் என்றும் நான் கீரனூரில் இருந்து படித்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.நானும் என் கணவரும் 2016 ல் இருந்து பிரிந்து வாழ்கிறோம் .என் கணவர் மீது ஜீவனாம்ச வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

(2) தாவா சொத்து ஆதியில் என் மாமனாருக்கு அரசு பட்டா வழங்கிய சொத்து என்றால் சரிதான் .தற்போது அந்த பட்டா இந்திராணியிடம் உள்ளது என்றால் சரிதான். என் மாமனார் , என் கணவர் மற்றும் மைத்துனர்கள் சேர்ந்து தாவா சொத்தை நந்திமங்கலம் கிராமத்தை சேர்ந்த தவமணி என்பவருக்கு அடமானம் செய்தார்கள் என்றால் சரிதான் .அந்த அடமான கடனை பைசல் செய்ய என் தங்கை புவனேஸ்வரிக்கு அடமானம் செய்தார்கள் என்றால் சரிதான் .அந்த கடனை திரும்ப செலுத்தாத காரணத்தால் என் தங்கை என் கணவர் மீது அசல் வழக்கு எண் . 61/2018 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான் .அந்த வழக்கு 6 வருடமாக நடந்தது என்றால் சரிதான் .அந்த கடனை யாரும் இன்றுவரை பைசல் செய்யவில்லை.என் கணவர் செங்கல்சூளை வைத்து தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான் .2 ம் பிரதிவாதி இந்திராணியின் கணவர் செல்வராஜிடம் என் கணவர் செங்கல்சூளை நடத்த கடன் பெற்றார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.நந்திமங்கலம் கிராமத்தை சேர்ந்த மாரி கவுண்டர் மகன் ராஜா என்பவரை எனக்கு தெரியுமா என்றால் அவர் காரப்பட்டு கிராமத்தை சேர்ந்தவர் .அவர் மூலமாக தான் எனது கணவர் செல்வராஜிடம் செங்கல்சூளை நடத்த ரூ .5,00,000/- கடன் வாங்கினார் என்றால் சரியல்ல .அவ்வாறு கடன் பெற்றபோது என் கணவர் அரசு கொடுத்த அசல் பட்டாவை செல்வராஜிடம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல . அந்த கடனுக்கு வட்டி செலுத்தாமல் என் கணவர் காலம் தாழ்த்தி வந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.என் சகோதரியின் அடமான கடனை நீதிமன்றத்தில் பைசல் செய்துவிட்டு செல்வராஜ் 2 ம் பிரதிவாதியான தன் மனைவியின் பெயரில் தாவா சொத்தை கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல . தாவா சொத்து 2 ம்

பிரதிவாதியின் பெயரில் மாறி அவர் தான் அதில் பயிர் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்கள் குடும்ப செலவிற்காக தான் தாவா சொத்தை என் கணவர் 2 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தார் என்றால் சரியல்ல .என் கணவர் கிரையம் கொடுத்ததை பற்றி நன்றாக தெரிந்துகொண்டு அப்போது அமைதி காத்துவிட்டு தற்போது என் பிள்ளைகளுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல .என் மகள் ஜான்சிராணி புதுப்பாளையம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் எனக்கு போலீஸ் சம்மன் அனுப்பப்பட்டது என்றால் சரிதான் . என்னிடம் காண்பிக்கப்படும் அந்த சம்மன் அது தான் என்றால் சரிதான் . **அது பி.வா.சா.ஆ.8.** அந்த புகார் ராஜேஸ்வரி என்பவர் மீது கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. அந்த புகாரின்மீது ராஜேஸ்வரி என்பவருக்கும் சம்மன் அனுப்பி விசாரித்தார்களா என்றால் இல்லை.

**(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தப்பட்டது)**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C.Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.